15-04-93

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 03 வெள்ளிக்கிழமை (16-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர்139

## இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதி பேசாலையில் புலிகள் அதிரடி!

### அதிகாரி உட்பட ஐந்து படையினர் பலி!!!
### 'டிரக்' முற்றாக சேதம்; ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 16
மன்னாரில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பேசாலைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்திய அதிரடித் தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட ஐந்து படையினர் உயிரிழந்துள்ளனர். படையினரின் 'டிரக்' வாகனம் முற்றாகச்

( 5ஆம் பக்கம் பார்க்க)

## கைப்பற்றிய ஆயுதங்கள்

மன்னார், பேசாலைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

★ ரி - 56 ரகத் துப்பாக்கி — 3
★ அவற்றிற்குரிய ரவைகள் — 15
★ ரி - 81 ரகத் துப்பாக்கி — 1
★ அதற்குரிய ரவைகள் — 3
★ நடுத்தர ரவைகள் — 440
★ ஜே. ஆர். கிரனேட் — 4
★ ஏ. கே. ஹோல்சர்கள் — 4
★ இராணுவத் தொப்பிகள் — 5

(ஓ)

### ★ கண்மூடித்தனமான குண்டு வீச்சு ★ பயங்கர ஷெல் தாக்கு

# பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்று 5 மணிநேரம் உக்கிரச் சண்டை!

## படையினரின் முன்னேறும் முயற்சி விடுதலைப் புலிகளினால் முறியடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல், 16

பண்டத்தரிப்பு, சில்லாலை காவல் அரண்களில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்றுக்காலை பெருத்த எடுப்பில் முன்னேற முயன்றனர். கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுக்கள் ஷெல் தாக்குதல்களை நடத்தியபடி படையினர் முன்னேற முயன்ற போதும், விடுதலைப் புலி வீரர்கள் 5 மணி நேரமாக எதிர்த்துப் போரிட்டு, அவர்களின் முன்னேறும் முயற்சியைத் தடுத்தனர். அதனைத் தொடர்ந்து படையினர் பின்வாங்கி தமது பழைய நிலைகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

பண்டத்தரிப்பு பகுதியில் இருந்து இரு முனைகள் ஊடாக நேற்றுக் காலை சுமார் 7-30 மணிக்கு, கவச வாகனங்களின் உதவியுடன் பெரும் எண்ணிக்கையான படையினர் முன்னேறி வந்தனர். சிறிது தூரம் முன்னேறிய நிலையில், விடுதலைப் புலிகள் அவர்கள் மீது நேரடியாகப் பொருதினர்.

அதை அடுத்து அப்பகுதியில் பெரும் போர் மூண்டது. விடுதலைப் புலிப் போராளிகள் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் கடும் சண்டையில் ஈடுபட்டனர்.

மோதல் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை ஸ்ரீலங்கா விமானப் படையினரின் புக்காரா விமானம் ஒன்றும், பொம்மர்கள் இரண்டும், ஹெலி ஒன்றும் கண்

[5 ஆம் பக்கம் [பார்க்க]

## மன்னாரில் தீவிர தேடுதல்

மன்னாரில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு நேற்றுக் காலை முதல் பெரும் தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

மன்னார் நகரப் பகுதி மற்றும் தலை மன்னார், பேசாலைப் பகுதிகள் எங்கும் பெரும் எண்ணிக்கையான படையினர் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர் என்றும்—

குறிப்பிட்ட சில பகுதிகளை நோக்கிப் படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார்ப் பகுதி முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தேடுதலின்போது சிலர் விசாரணைக்காக படையினரால் கூட்டிச் செல்லப்பட்டதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

[ஓ-3]

## செஞ்சிலுவை தொண்டரை நோக்கி ஹெலி வேட்டு!

### மயிரிழையில் தப்பினர்

யாழ்ப்பாணம், ஏப். 16
நேற்று இடம்பெற்ற படையினரின் இரு வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் மயிரிழையில் உயிர் தப்பினர்.

ஒரு சம்பவம் சித்தன்கேணி சந்தி பிள்ளையார் கோவிலடியில் இடம்பெற்றது.

மற்றைய சம்பவம், சண்டிலிப்பாய்ப் பகுதியில் இடம்பெற்றது.

சித்தன்கேணிச் சந்தியில் ஹெலி ஒன்று தாக்குதல் நடத்திய போது செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை வலி மேற்குப் பிரிவைச் சேர்ந்த பொருளாளர், நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் காயம் இன்றித் தப்பினர்.

இவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தில் இருந்து சுமார் 10 யார் தூரத்துக்குள் நின்ற ஒருவர் ஹெலி தாக்குதலில் கொல்லப்பட்டார்.

நேற்று நண்பகல் 12-45 மணி அளவில் இடம்பெற்ற

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இரு பொதுமக்கள் உயிரிழப்பு; 12 பேர் காயம்; வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஏப். 16
வலிகாமம் மேற்கில் ஸ்ரீலங்கா படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலின்போது பொதுமக்கள் இருவர் உயிரிழந்தனர். 12க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

குண்டுவீச்சுக்கள், ஷெல் தாக்குதல்களினால் வீடுகள் பல இடிந்து நாசமாகின. இன்னும் பல வீடுகள், பாடசாலைகள், கோயில்கள், மற்றும் கட்டடங்கள் பல சேதமடைந்தன.

நேற்று நண்பகல் சித்தன்கேணியில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாக்குதல் நடத்தியது. மரத்தின் கீழ் ஒதுங்கிநின்ற காலையடி தெற்குப் பனிப்புலத்தைச் சேர்ந்த சர்மா சிவகரன் (23 வயது) என்ற இளைஞர் பலியானார்.

மற்றொரு சம்பவத்தில் — விமானக் குண்டுவீச்சு அதிர்ச்சியில் இன்னும் ஒருவர் மரணமானார் அவரது பெயர் விபரம் தெரியவில்லை.

நேற்றைய சம்பவங்களில் காயமடைந்த பொதுமக்களில் ஒன்பது பேர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். மற்றும் பலர் சிறுகாயங்களுக்கு இலக்காகி வேறு இடங்களில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

பல்வேறு தாக்குதல்களினாலும் 30 வரையான வீடுகள் சேதமடைந்தன என்றும், அவற்றில் ஏழு வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன என்றும் தெரியவந்தது. [ஓ 15]

## யாழ். நகரில் இன்று கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம், ஏப். 16
யாழ். செஞ்சிலுவைச் சங்க உப தலைவர் திரு. புவனேந்திரன் கடமையில் ஈடுபட்டிருந்த நேரம் ஸ்ரீலங்காப் படையினரால் கொல்லப்பட்டதற்கு ஸ்ரீலங்கா அரசைக் கண்டித்தும் —

இத்தகைய சம்பவங்கள் எதிர் காலத்தில் நிகழாமல் தடுப்பதை வலியுறுத்தக் கோரியும் —

சர்வதேச யுத்த விதிமுறைகள் பேணப்படுவதை உறுதிப்படுத்துமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைக் கோரியும் —

யாழ். நகரில் இன்று வெள்ளிக்கிழமை காலை பிரமாண்டமான கண்டனப் பேரணி நடைபெற உள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பல்லாயிரக்கணக்கானோர் நேற்று இடம்பெயர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஏப். 16
வலிகாமம் மேற்கில் நேற்று இடம்பெற்ற மோசமான விமானத் தாக்குதல்கள், ஷெல் வீச்சுக்களைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

பிரான்பற்று, நிற்சாமம், பண்டத்தரிப்பு, பனிப்புலம், வடலியடைப்பு, பண்ணாகம், சுழிபுரம், தொட்டிலடி, சங்கானை கிழக்கு மற்றும் பல இடங்களில் இருந்தும் ஏராளமானோர் கையில் கிடைத்தவற்றுடன் அணி அணியாக [illegible] பாதுகாப்பான இடங்களை நோக்கி [illegible] இருந்தனர்.

இவர்களில் மிக அதிகமானோர் சண்டிலிப்பாய் பகுதியில் தங்கியிருந்தனர் இன்னும் பலர் பாடசாலைகள், கோயில்கள், பொது இடங்கள், மற்றும் உறவினர் நண்பர்களின்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்புக் கல்லூரி குண்டு வீச்சில் சேதம்

யாழ்ப்பாணம், ஏப். 16
ஸ்ரீலங்காப் படையினரின் நேற்றைய தாக்குதல்களில் வலி. மேற்கில் 3 பாடசாலைகள் சேதமடைந்தன அவற்றில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி (ஆண்கள்) பலத்த சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே பகுதியில் நடந்த குண்டு வீச்சுகளினால் இந்து மகளிர் கல்லூரி சந்தியிலுள்ள நான்கு கடைகள், ப.நோ.கூ. சங்கக் கிளை மற்றும் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன.

காலையடியில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையும் சேதமடைந்தது.

இவற்றைவிட நான்கு கடைகள் உட்பட பல்வேறு கட்டடங்களும் நேற்றைய தாக்குதல்களின் போது சேதமடைந்தன என்று எமது [illegible] யாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

[illegible]

## காயமடைந்தோர்

யாழ்ப்பாணம், ஏப். 16
நேற்றைய சம்பவங்களில் காயமடைந்தோர் வருமாறு:-

★ நவாலி வடக்கில் புக்காரா குண்டுவீச்சு — துரைசிங்கள் ராஜினி (17 வயது) காயம்.

★ சங்கானை — மல்லாகம் வீதியில் புக்காரா குண்டுவீச்சு — டாக்டர் ஆறுமுகம் இராசரத்தினம் (64 வயது), அவரது மனைவி சுஸ்வாி (52 வயது), அவர்களினது மகன் டார்சான் (9 வயது) மற்றும் இராசையா முகுந்தா (26 வயது) ஆகியோர் காயம்.

★ பண்ணாகம், விசவத்தனையில் ஷெல் வீச்சு — இராமசாமி கமலதாசன் (17 வயது), மாணிக்கம் ஜெயகாந்தன் (20 வயது) ஆகியோர் காயம்.

★ இதே பகுதியில் துப்பாக்

(5ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L 95

அளவையியல்

திரு. யுகபாலசிங்கம்

ஆரம்பம்: 17 - 04 - 93

சனி 5-00 P. m.

**கிறீஸ்தவம்**

திருமதி A. மல்லிகா

செவ். வியா. 4-00 P. m.

**SHAMROCK**

யாழ். சுண்டுக்குளி.

(25269)


## தப்பியோட முயன்ற

# ஈ.பி.ஆர்.எல்.எவ்.உறுப்பினர் மீது தமிழக பொலீஸார் சூடு

சென்னை, ஏப் 16

இராமநாதபுரத்தில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்றிலிருந்து தப்பி ஓடமுயன்ற ஈ பி ஆர். எல். எவ் குழுவைச்சேர்ந்த பாலசுப்பிரமணியன் என்பவர் தமிழக பொலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஒரிஸாவில் உள்ள இந்த அமைப்பின் முகாமில் இருந்து நவீன ஆயுதங்களுடன் வெளியேறிய சிவானந்தன் என்பவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழக பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாகவும்—

அவர் கொடுத்த தகவலின் பேரில் கைது செய்யப்பட்ட

(5 ஆம் பக்கம் பார்க்க)


## பின்போடப்பட்டுள்ளது

14-04-93 அன்று நடைபெறவிருந்த எமது அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு எதிர்வரும் 01-06-93 அன்று நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

"அறிவியல் ஐக்கியம், சகோதரத்துவம்"

பாரதி இளைஞர் அறிவியற் கழகம்
பழைய பூங்கா வீதி, யாழ்.

(23274)



யாழ்ப்பாணம்
அருள் மிகு அத்தியடி
பிள்ளையார் கோயில்

## வசந்தோற்சவம்

இரவு: 9 - 45 மணிக்கு 16 - 04 - 1993

**யாழோசை - கண்ணனின்**
**வயலின் சோலோ**

மிருதங்கம் - S. துரைராஜா தவில் - திரு. ஜெயா
கடம் - அ. செல்வரட்ணம் கஞ்சிரா - S சிவா

(25265)



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

# O/L DAY CLASSES

8·00 — 2·00

மீண்டும் ஒரு புதிய பிரிவு

பிரிவு - IV

ஆரம்பம்: **17 - 04 - 1993**

சனி காலை 8·00 மணி

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
★ வாரத்தில் 4 நாட்கள் நடைபெறும்
★ கணிதம், விஞ்ஞானம் வாரத்தில் 6 மணித்தியாலம் நடைபெறும்.
★ இவ்வருடம் 5 பிரிவுகள் மட்டுமே ஆரம்பமாகும்.

(சி-4909)



## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
08
04
1931

மறைவு:
27
04
1992

**அமரர் இளையதம்பி சின்னத்தம்பி**
(ஐயாத்துரை)

திதி: 16 — 04 — 1993

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புப் பப்பாவே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும், உங்கள் உருவமும் நினைவும் எங்கள் மனதை விட்டு நீங்கா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

(25267)



# பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனம்

# PATRICIAN INSTITUTES

## தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

### 01. Computer Processing Courses

1. Computer Programming ia BASIC Language and MS-DOS
   Duration: 4 Months Commencing: 27 - 04 - 1993
2. Word Processing and MS DOS (Word Star - 4000)
   Duration: 3 Months Commencing: 27 - 04 - 1993

WEEK DAY CLASSES (Theory and Practicals)

3. d Base III Plus and MS-Dos
   Duration: 4 Months
4. LOTUS 1-2-3 (Spread Sheet Analysis and MS-DOS
   Duration: 4 Months

WEEK-END CLASSES (Theory and Practicals)

★★ Equipment Used: LASER XT/2, XT/3, 386 and Bitcom Computers (IBM Compatibles)

★★ Qualification: G. C. E. (O/L)

பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் (26 - 04 - 1993) திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

### 02. Civil Draughtsmanship and Quantity Surveying

Course Covers:

(i) Draughtsmanship
(ii) Engineering Drawing
(iii) Building Construction
(iv) Civil Engineering Materials
(v) Building Quantity

★★ Qualification: G. C. E. (O/L) Duration: 6 Months

### 03. City and Guilds of London Examination - Year 93/94

1. Quantity Surveying
2. Electrical, Electronic Engineering Technical

Part I & II

SUBJECTS: (i) Engineering Sciences & Circuits
(ii) Power
(iii) Electronic

★★ Qualification: G. C. E (O/L)

Part III

SUBJECTS (i) Advanced Electrical Technology
(ii) Generation Transmission & Distribution of Electrical Energy

ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

★★ Qualification: Part II சித்தி எய்தியோர் மட்டும்

### 04 Special English Classes

இலக்கணத்துடன் க. பொ. த. (சா/த) மற்றும் சகல பரீட்சைகளுக்கும் ஏற்ற வகையில் மிகக் குறுகிய காலப் பயிற்சி நெறிகள் நடைபெறும்.

### 05. TOEFL (Test of English as a Foreign Language)

Duration: 4 Months

### 06. Short - Hand and Typing (English)

சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

### 07. Motor Mechanism

மோட்டார் வாகனம் திருத்துதல் காலம் - 6 மாதங்கள்

### 08. Motor Winding

மோட்டார் வைண்டிங் காலம் - 4 மாதங்கள்

### 09. Electrical Wiring

மின்சார இணைப்பு காலம் - 3 மாதங்கள்

### 10. General Electrician

ஜெனரல் எலக்ரீஸியன் காலம் - 4 மாதங்கள்

**இதில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்கள்**

1. அடிப்படை மின்சாரம் — Basic Electricity
2. மோட்டார் வைண்டிங் — Motor Winding
3. ஆமேச்சர் வைண்டிங் — Armarure Winding
4 ரான்ஸ்போமர் வைண்டிங் — Transformer Winding
5. வீட்டு மின்னிணைப்பு — House Wiring
6. எல்லா விதமான மின் உபகரணங்களும் பழுது பார்த்தல், இயக்குதல் — Repairing of All Type of Electrical Equipments

விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:

பதிவாளர்,
பற்றீஷன் இன்ஸ்ரிரியூட்ஸ்,
59, செள். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

REGISTRAR,
Patrician Institute of Higher Studies,
59, St. Patrick's Road,
JAFFNA.

(சி-4843)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுப்புக் காவல் கைதிகள் மீது விசாரணை;

# மனித உரிமைகள் பணியகம் சார்பாக நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஏப். 16
அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு மனித உரிமைகள் பணியகம் நீதிமன்ற உத்தரவைப் பெற வேண்டியதில்லை.

உயர் நீதிமன்றம் முன் கண்டவாறு கடந்த வாரம் தீர்ப்பளித்தது.

23 அடிப்படை மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தும்படி அண்மையில் உயர் நீதிமன்றம் மனித உரிமைகள் பணியகத்துக்கு உத்தரவிட்டதைத் தொடர்ந்து, பணியகம் தாக்கல் செய்த அறிக்கை ஒன்று தொடர்பாகவே உயர்நீதிமன்றம் முன்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது

அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான விசாரணைகளை ஒரு மாத காலத்தினுள் நடத்தி முடிக்க தேவையான மேலதிக ஊழியர்களை நியமிக்க மனித உரிமைகள் பணியகத்துக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 21ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவைப் பெறாமலேயே தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு மனித உரிமைகள் பணியகத்துக்கு சட்டம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் உயர் நீதிமன்றத் தீர்ப்பில் தெரி தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த எ


## புத்தாண்டு விசேட இன்னிசைக் கச்சேரி

இடம்: உரும்பராய் அருள்மிகு ஞான வைரவ சுவாமி கோவில்.

காலம்: 16 - 04 - 1993 வெள்ளி மாலை 6மணி

வழங்குபவர்: திரு. வர்ணராமேஸ்வரன் அவர்கள்

அணிசெய்யும் கலைஞர்கள்:
வயலின் — செல்வன் எஸ். கோபிதாஸ்
மிருதங்கம் — ,, கே. கண்ணதாசன்
கடம் — ,, எஸ். வேல்மாறன்
கெஞ்சிரா — ,, எஸ். நாகராஜன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- மேற்படி ஆலய தர்மகர்த்தாசபை.

(25214)



யாழ். நகரில்..
இரு தசாப்தங்களுக்கு மேலாக இணையற்ற சேவையில் உயர்ந்து விளங்கும் கல்வி நிறுவனத்தில்

O/L DAY CLASS
பகல்நேர வகுப்பு

* முதற் பிரிவு ஆரம்பமாகி ஒரு வாரத்தினுள் அடுத்த புதிய பிரிவு
(அதே இணையற்ற ஆசிரியர் குழு)
* இவ் இரண்டாவது பிரிவிற்குமேல் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படமாட்டாது.

19 ஆம் திகதிக்கு முன் பெயர்களை பதியுங்கள்

ESTD:- 1973 REGD:- No. J/7998
The Express Institute
IRUPALAI - KOPAY

(25260)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 23 — 12 — 1953
மறைவு: 16 — 04 — 1991

Rev. ம. சாமுவேல் தர்மகுலசூரியர்
(சூரி)
(பரியோவான் கல்லூரி பழைய மாணவன்)

அன்னை மண்ணை நீர் விட்டு
அயலான் மண்ணில் உயிர்துறக்க
என்ன பாவம் செய்தோம்
உங்கள் சிரித்த வதனத்தை
நாம் என்று காண்போம்
இரண்டாண்டு சென்றாலும்,
காலமெல்லாம் உங்கள் நினைவால் வாழும்;

அன்பு மனைவி பிள்ளைகள்,
மாமா, மாமி, மச்சான்மார்,
மச்சாள்மார்.

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(25...)


Personal
New Science Centre
Elilakam Front Lane, Jaffna.

95 A/L
(விஞ்ஞானப் பிரிவு)

Pure/App. — 8 a. m
திரு. குணசிங்கம் B. Sc. (Hons)
Che. — 7 a m
திரு செல்வா B. Sc. (Hons)
Phy. — 10 a. m.
திரு. ரவீந்திரநாதன் B. Sc [Cey.] - DiP-in-Ed.
Bot — 8 a m.
திரு பாலா
Zoo. — Batch - I 9 a m.
Batch - II 12-30 p. m.
திரு ஈஸ்வரதாசன் B. Sc. (Cey.) - Dip-in-Ed.

(சி-4848)



புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.

A/L 95

பொருளியல்: ஞானேஸ்
கணக்கியல்: Sam
வர்த்தகம்: தேவா
அளவையியல்: சோதி
தமிழ்: குழந்தை
அரசியல்: ஜியூபேட்
புவியியல்: சண்
இ. நாகரிகம்:
இ. சமயம்: அருள் நங்கை
வரலாறு: நாகராணி
கிறீஸ்தவம்: அருட்சகோதரர்

10 — 04 — 1993 இல் ஆரம்பமாகிவிட்டன

(சி-4920)


## அன்னைபூபதி நினைவாக உண்ணாவிரதம், சிரமதானம்

தியாகி அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவாக இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிமுதல் 5 மணி வரை யாழ் இந்துக் கல்லூரி, கோப்பாய் - நீர்வேலி பிள்ளையார் கோவில் முன்றலிலும், மல்லாகம் பழம் பிள்ளையார் கோவிலிலும் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெறும்.

இதேவேளை - பளை — சுரபி ச. ச. நி வீதி புனரமைப்பு செய்தல், பருத்தித்துறை — அம்பளை கிழக்கு பிரதான வீதி துப்புரவு செய்தல், உடுப்பிட்டி — பராசக்தி ச. ச. நிலையத்தை புனரமைப்பு செய்தல், உடுப்பிட்டி வல்வெட்டித்துறையில் இருந்து செல்லும் மாவீரர் துயிலும் இல்ல வீதியை துப்புரவு செய்தல் ஆகிய சிரமதானப் பணிகளும் இன்று இடம்பெறவுள்ளன. (த)


## சித்திர வேலாயுதனே

இராகம்: ஷண்முகப்பிரியா தாளம்: ஆதி

— எடுப்பு —
சித்திர வேலாயுதனே - நாம்
நித்தம் தொழும் சிவ புத்திரனே
- சித்திர...

— தொடுப்பு —
முத்தமிழ் அகம் மேவும் தத்துவனே - எம்
சித்தமெல்லாம் நிறைந்த உத்தமனே
- சித்திர...

— முடிப்பு —
அச்சுதன் மருகோனே ஐங்கரற் கிளையவனே
பச்சைமயில் வாகனனே பார்வதியாள் பாலகனே
அச்சுவேலி பதியில் அமைந்த வடிவேலவனே
இச்சகத்தி லெம்மை இனிதுகாத் தருள்பவனே
- சித்திர...

அச்சுவேலி வடக்கு சித்திரவேலாயுத சுவாமி கோவிலில் இன்று (16 - 04 - 1993) வெள்ளிக்கிழமை நிகழும் சங்காபிஷேகத்தை முன்னிட்டு இக் கவி வெளியிடப்படுகின்றது.

ஆக்கம்: சின்னமணி.

முருகன் அடியார்களுக்கும், எமது வாடிக்கையாளர்களுக்கும் பொது மக்களுக்கும், சாந்தியும் சமாதானமும் சுபீட்சமான வாழ்வும் சிறக்கப் பிரார்த்திக்கின்றோம்.

விஜிதா அரிசி ஆலை ஸ்தாபனத்தார்
வல்லை வீதி, அச்சுவேலி.

(25264)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்



தோற்றம்: 15 — 08 — 1920
மறைவு: 19 — 03 — 1993

அமரர்
பொன்னுச்சாமி மார்க்கண்டு
(சாமி)

அபர பட்ச ஏகாதசி திதியில் அமரத்துவம் அடைந்த அன்னாரின் மறைவை கேள்வியுற்று, சகலவித உதவிகள் புரிந்தவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், நேரிலும், தகவல் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேஷ்டி சபிண்டிக் கிரியைகள் நாளை (17 - 04 - 1993) சனிக்கிழமை காலை 7-00 மணிக்கு செல்வச் சந்நிதியிலுள்ள இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
செல்வச்சந்நிதி, தொண்டமனாறு.

(25242)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

லஹவலன் பிறவுண் பேட்டு குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (6116)

## தேவை

ஜாம்போத்தல்கள், பன்ரா. கொக்கோகோலா, வகையிலான 300 மில்லி லீற்றர். 160 மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும். சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு, கோப்பாய். (சி-4894)

தேநீர்க் கடைக்கு அனுபவம் வாய்ந்த வெயிட்டர்கள், ரீமேக்கர், சகல வித மான சிற்றுண்டிகளைத் தயாரிப்போர் உடனடியாகத் தேவை. மயில்வாகனம் தேநீர்ச்சாலை, பிரதான வீதி, பருத்தித்துறை. (25241)

## மணப்பெண் தேவை

யாழ். இந்து. இங்கிலாந்தில் நீண்டகாலமாக படித்துக் கொண்டு வேலை புரிபவருக்கு, இங்கிலாந்தில் அல்லது இலங்கையில் அழகான, சுமாரான உயரமுள்ள,படித்த. செவ்வாய்க் குற்றமுள்ள 26 வயதிற்கு உட்பட்ட மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் செய்து வீசாவுடன் அழைத்துச் செல்லப்படுவார். முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 520, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (25257)

## புலமைப்பரிசில் ஆண்டு-5

வருடா வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் வெளியிடப்படும் புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 18-04-93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்து தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (25240)

## யாருடையது?

கைக்கடிகாரம் கொடிகாமம் ஜவானி இசை ஒடை அருகாமையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதை இழந்தவர் தகுந்த அடையாளம் காட்டி ஜவானி இசை ஒடையில் பெற்றுக் கொள்ளவும். (5888)

## இலவச திருமண சேவை

32 வயது, அத்தம், செவ்வாய் 2, ஜேர்மனியில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் விவாகம் செய்து அழைக்கலாம். நேரடித் தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, யாழ்/ நாச்சிமார் கோவிலடி. (252 6)

## புலமைப் பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதத்திலும் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளிலும், வகுப்புப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-4583)

## பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டுகள் 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம் வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக் கல்வி, ஆங்கிலப் பாடங்களுக்கான வினாத்தாள்கள் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, யாழ்ப்பாணம். (சி-4584)

## A/L மாதிரி வினாத்தாள்

A/L விஞ்ஞானம், வர்த்தகம், கலை, கணிதம் பிரிவுகளுக்கான அனைத்து பாடங்களுக்கும், மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes யாழ்ப்பாணம். (சி-4582)

---

3ஆம் பிரிவு A/L 95

# கலை, வர்த்தகக் கல்லூரி
## C. C. A.

வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம்.

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஶ்ரீ |
| வர்த்தகம் | — | திரு இரட்ணம் |
| அளவையியல் | — | திரு சபந்தன் |
| இந்துநாகரிகம் | — | திரு ஜோதீஸ்வரன் |
| தமிழ் | — | திரு. தங்கராசா |
| புவியியல் | — | திரு. வேலாயுதபிள்ளை |
| அரசியல் | — | திரு. பஞ்சாட்சரம் |
| கிறிஸ்தவ நாகரிகம் | — | திரு. செபஸ்ரீன் |

**ஆரம்பம்:- 17 - 04 - 1993**
காலை 8-00மணி.

குறிப்பு: பிரிவு I, II அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

— நிர்வாகி.
[சி-4919]

---

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

# யாழ். அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 35ஆவது ஆண்டு
# தமிழ் இசை விழா

இடம்: பண்டாரக் குளம் பிள்ளையார் ஆலய முன்றல் நல்லூர்

**16-04-1993 வெள்ளிக்கிழமை**
(இறுதி நாள்)

★ பத்தாவது நாள் நிகழ்ச்சிகள் ★

மாலை 7.00 மணி

| | | |
|---|---|---|
| செல்வி சுகன்யா சிவானந்தன் | — | பாட்டு |
| திரு. R. S. கேசவமூர்த்தி | — | வயலின் |
| செல்வன் ப. ரதிரூபன் | — | மிருதங்கம் |

7-30 மணி

| | | |
|---|---|---|
| திரு. V. K. நடராஜா | — | பாட்டு |
| திரு R. S. கேசவமூர்த்தி | — | வயலின் |
| திரு S. துரைராஜா | — | மிருதங்கம் |
| திரு. ப. ரதிரூபன் | — | கடம் |

8.45 மணி

★ இசைச் சொற்பொழிவு
"கோபால கிருஷ்ண பாரதியார்"

நிகழ்த்துபவர்:
சிவ வை. நித்தியானந்த சர்மா

10.00 — 11.15 மணி
கெஞ்சிற் கச்சேரி

| | | |
|---|---|---|
| திரு. P. S. பிச்சையப்பா | — | நாதஸ்வரம் |
| திரு. S. ராமப்பிரியன் | — | வயலின் |
| திரு. P ரவீந்திரன் | — | தவில் |
| திரு. சதா வேல்மாறன் | — | கடம் |

விழா சிறப்புற மனமுவந்து வாழ்த்துவோர்:

- நியூ லலிதா ஜுவலர்ஸ் 74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
- மதி ஆபரண மாளிகை 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
- நதியா நகை மாளிகை 2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
- நியூ ஆனந்தா ஜுவலர்ஸ் 155, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(25244)

---

# நீங்கா நினைவலைகள்



அமரர்
## மு. வல்லிபுரம்



அமரர்
## வ. சிவசோதி

(நெல்லியடி திருமகள் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்கள்)

மண்ணில்: 12 - 03 - 1919
விண்ணில்: 08 - 05 - 1991

படைப்பு: 18 - 05 - 1943
பறிப்பு: 13 - 06 - 1989

திதி: 16 - 04 - 1993

நீங்கள் இல்லாத திருமகள் நிலையம் கண்ணிழந்த முகம் போல் இடப்பதாக உணர்கிறோம். மறக்க முடியாத மாணிக்கங்களின் பாதம் படர்ந்த நிலம் வெற்றிடமாக உங்களை உணர்த்திக் கிடக்கிறது. உங்கள் நான்கு திருவடிகளும் எங்கள் நிலையத்தை ஆளுவதாக நம்புகிறோம்.

விண்ணமர்ந்துவிட்ட நாட்கள் பலவானாலும், கண்ணீர் உறைந்த நீருடனே கலங்குகிறோம்.

- திருமகள் குடும்பம்.

திருமகள் சோதி வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(25261)

---

# நன்றி நவிலலும்
# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



## திருமதி செல்லம்மா செல்லத்துரை

1993-03-15ஆம் திகதி இறையடி சேர்ந்த எமது அன்பு அன்னை திருமதி செல்லம்மா செல்லத்துரை அவர்களின் மரணச்செய்தி கேட்டு, எமது துக்கத்தில் பங்கு கொள்ள வருகை தந்தோர், அனுதாபச் செய்தி அனுப்பியோர், மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தோர், காலமறிந்து கைகொடுத்து உதவியோர் மற்றும் அனைவருக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் 24ஆவது வார்ட்டில் எமது அன்னையைச் சிகிச்சைக்காக அனுமதித்திருந்த வேளையில் பலவகையிலும் பேருதவி புரிந்த வைத்திய அதிகாரிகள், தாதிமார்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைச் சமர்ப்பிப்பதோடு, இன்று 1993-04-16 இல் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள எமது அன்னையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும், பங்கு கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்,

பிள்ளைகளும், மருமக்களும்,
பேரப்பிள்ளைகளும்.

அச்செழு, நீர்வேலி

(25236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உதட்டளவில் பேசி ஏது பயன்?

நாடு பிளவுபடுவதைத் தடுக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும். இதுவே ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாசாவின் சிங்கள-தமிழ் புத்தாண்டு தினச் செய்தியின் பிரதான கருத்தம்சம்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதே இன்றைய அவசியத் தேவையாக உள்ளது — என்பது அவரின் புத்தாண்டுச் செய்தியின் உபகருத்து.

இவை ஒன்றும் புதியவை அல்ல. வடக்கு - கிழக்கில் யுத்தம் ஆரம்பமாகிய பின்னர், கடந்த மூன்று வருடகாலமாக அவர் இக்கருத்துகள் இரண்டையும் மறந்து போகாமல் அடிக்கடி கூறிவருகின்றார்.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், சற்று நிதானமாகச் சிந்திக்கும் சிங்களப் பிரமுகர்களும், புத்திஜீவிகளும், அரசியல் விமர்சகர்களும் கூட இந்த இரண்டு கருத்துகளையும் வலியுறுத்தி உள்ளார்கள். அதற்கும் மேலாக வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அவசரமாகத் தீர்வு காணாவிடில் நாடு இரண்டுபடுவதைத் தடுக்க முடியாது என்று புத்திஜீவிகளும் விமர்சகர்களும் எச்சரித்தும் உள்ளனர்.

ஆனால் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதன் அவசியம் உணரப்பட்டுள்ளதாகக் கருதுவதற்கு, நம்புவதற்குச் செயலளவில் எதுவும் நடக்கவில்லை அதனை நாடிய செயலுரு எதனது சிறுகீற்றைத்தானும் காணமுடியவில்லை!

தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் — கட்சிகளின் — அதிகாரப் போட்டிக்கும், அதற்கேற்றதான செல்வாக்குத் தேடும் அலுவல்களுக்கும் முன்னுரிமையும் முதலிடமும் அளிக்கப்படுகின்றனவே ஒழிய வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அல்ல.

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குக் காட்டப்படும் ஆர்வத்தையும் செயற்பாட்டையும் வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதில் காட்டியிருக்கலாம் அல்லவா? யுத்தத்தை நிறுத்தி, வடக்கு - கிழக்குப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரக் கூடிய நியாயமான, உருப்படியான ஆக்கபூர்வமான தீர்வொன்றை முன்வைத்திருக்கலாம் அல்லவா? வடக்கு-கிழக்குப் பிரச்சினையைவிட மாகாணசபைத் தேர்தலையே முக்கியமாகக் கருதிய தென்னிலங்கை அரசும், எதிரணியினரும் உதட்டளவில் கூறுவதை நம்பவேண்டுமா? அல்லது அவர்கள் செயலில் காட்டுவதை நம்பவேண்டுமா?

உண்மையாகவே, தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வை அவசர தேவையாகக் கருதி இருந்தால், நாட்டில் பெரும் நெருக்கடியையும், இழப்புகளையும் ஏற்படுத்தியுள்ள இனப்பிரச்சினைக்கு தமிழர்களும் ஏற்கக் கூடிய தீர்வை வகுத்த பின்னர், அதனைச் செயற்படுத்திய பின்னர்தான் மாகாணசபைத் தேர்தல் குறித்துச் சிந்தித்திருக்க வேண்டும்.

தமிழர்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை வழங்க வல்ல நியாயமான ஒரு தீர்வை வகுத்து — அது விடயத்தில் அரசும், எதிரணிகளும் ஒற்றுமையாக இருந்து— அதனை முன்வைத்திருந்தால் மாகாண சபைகளே இல்லாமற் போயிருக்கக் கூடும்.

வண்டிக்கு முன்னால் பூட்ட வேண்டிய குதிரையை பின்னால் கட்டிப் போட்டுவிட்டு, குதிரை வண்டில் பயணம் செய்ய முடியுமா? குதிரை வண்டிச் சவாரிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளோம் என்று கூறுவதை சுயபுத்தி உள்ள எவரும் ஏற்பார்களா?

மொத்தத்தில் வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று உதட்டளவில் கூறுவது உலகத்தை ஏமாற்றுவதற்கே. ஆனால் உலகமும் இப்போது உண்மையைத் தெரிந்து கொண்டிருக்கும்.

# நாஸி இளைஞர்களினால் இலங்கையர் தாக்கப்பட்டார்

## இத்தாலியில் சம்பவம்

ரோம், ஏப். 16

இத்தாலியில் வாழும் வெளிநாட்டுப் பிரஜைகள் குழுவின் செயலாளரான இலங்கைப் பிரஜை மூகைதீன் அக்பர் நாஸிர் (வயது 48, என்பவர் நேற்று நாஸிக் குழு இளைஞர்களினால் தாக்கப்பட்டார்.

இந்த இளைஞர்கள் நேற்று அவரது இல்லத்துக்குள் புகுந்து நாஸி சின்னங்களை சுவர்களில் வரைந்தனர்

பின்னர் அவரைத் தாக்கியதுடன் அவரைக் கட்டி, எளிதில் தீப்பற்றக்கூடிய திரவத்தை அவர் மீது வீசினர்.

பின்னர் அவரின் முகத்தில் கத்தியால் 'சுவஸ்திகா' நாஸிச் சின்னத்தையும் கீறுவதற்கு அந்த நாஸி இளைஞர்கள் முயன்றனர்.

காயத்துக்குள்ளான நாஸிர் தற்சமயம் உள்ளூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்

வெளிநாட்டாரை வெளியேற்ற வேண்டும். என்று கோரி இந்த நாஸி இளைஞர்கள் இது போன்ற தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## இன்று

அரியாலை பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா சேவா நிறுவனத்தின் இரண்டாவது ஆண்டு ஆரம்ப விழா இன்று வெள்ளி காலை 9 மணிக்கு கொழும்புத்துறையில் அமைந்துள்ள பிரசாந்தி நிலையத்தில் நடைபெறும்.

இன்றைய விழாவில் தீபாராதனை, 1008 திருநாம அர்ச்சனை, சிறுவர் பஜனை, வளர்ந்தோர் பஜனை, பால விகாஸ் சிறுவர் நிகழ்ச்சிகள், சாயி பாபாவின் அறிவுரைகள், நாராயண சேவை, பக்தர்களுக்கு திருவமுது அளித்தல் ஆகியவை இடம்பெறும்

o o o

அச்சுவேலி பத்தைமேனி தீர்த்தங்குளப் பிள்ளையார் கோவில் பஜனைக்குழு ஆரம்பிக்கப்பட்டு 17 ஆண்டுகள் பூர்த்தி அடைவதை முன்னிட்டு இன்று மாலை மேற்படி கோயிலில் விசேட சொற்பொழிவும், பஜனைக் கச்சேரியும் இடம்பெறும். (த)

## தமிழ் இசை விழா நிகழ்ச்சிகள்

யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத் தமிழ் இசை விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும்.

இன்றைய நிகழ்ச்சிகளில் பாட்டுக் கச்சேரிகள், இசைச் சொற்பொழிவு மற்றும் கெஞ்சிற் கச்சேரி ஆகியவை இடம் பெறும். (த-111)

## பாராட்டும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஏப். 16

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையினரின் ஏற்பாட்டில், மருத்துவம், கலை, முகாமைத்துவ பீடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட காரைநகர் மாணவர்களைப் பாராட்டலும், பரிசளிப்பும் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நாளையும் நாளை மறுதினமும் பிற்பகல் 1 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்

கவிஞர் எம். பி. அருளானந்தன் தலைமையில் நடைபெறும் முதல் நாள் நிகழ்ச்சியில் பரிசளிப்பும், பாராட்டலும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து காரை சிறுவர்களின் கலை நிகழ்வுகளும், யாழ்ற்ரன் கல்லூரி மாணவர்களின் பட்டிமன்றமும் இடம் பெறும்.

ஆசிரியர் கந்தையா பத்மானந்தன் தலைமையில் நடைபெறும் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில், இன்னிசைக்கச்சேரி, நடன நிகழ்வுகள், பட்டி மன்றம் ஆகியவற்றுடன் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளையின் ''காலம் மாறும்'' என்னும் நாடகமும் மேடையேற்றப்படும். (த)

## விளையாட்டுநிகழ்வுகள்

யாழ்நகர் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் இன்றும்— ''செற்அப்'' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளையும் ஆரம்பமாகின்றன.

பதினொரு வீரர்களைக் கொண்ட அணிகளுக்கிடையில் — 20 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட — விலகல் முறை கிரிக்கெட் சுற்றுப் போட்டித்தொடரின் முதலாவது ஆட்டம் இன்று பிற்பிற்பகல் 2 30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் அடைக்கல மாதா கோயிலுக்கு சமீபமாக உள்ள ஐங்கரன் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகும்.

இந்த ஆட்டத்தில் நொதேன் வி. க. வெள்ளை அணியை எதிர்த்து நாவலடி வி, க அணி மோதும்.

o o o

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் யாழ் கல்வித் திணைக்களம் நடத்தும் மாவட்ட நிலை கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகுகிறது.

17, 19 வயதுப் பிரிவுகளுக்கு என நடத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில், ஒவ்வொரு பிரிவிலும் கோட்ட மட்டங்களில் முதல் இரு இடங்களைப் பெற்ற அணிகள் பங்குபற்றுகின்றன.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ நீர்வேலி அத்தியார் இந்து மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் வயாவிளான் ம. ம. வி. ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றின் 17, 19 வயதுப் பிரிவு அணிகள் மோதும்.

யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் யாழ் கனகரத்தினம் ம. ம. வியின் 17 வயதுப் பிரிவு அணி சுன்னாகம் மயிலணி ம. ம வி. அணியையும் கனகரத்தினம் ம. ம. வியின் 19 வயதுப் பிரிவு அணி யூனியன் கல்லூரி அணியையும் எதிர்த்து விளையாடும் (உ)

o o o

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு நாவாந்துறை கலைவாணி மைதானத்தில் நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனிஸ் வி. க. அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி வி. க. அணி மோதும். [உ]

o o o

சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஸ்கந்தா மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு :—

★ மல்லாகம் கி மூ: ச வி க அணி எதிர் சுன்னாகம் ஸ்கந்தா வி க. அணி

★ இளவாலை யங் ஹென்றீஸ் வி. க அணி எதிர் ஆனைக்கோட்டைஅறிவொளி வி க. அணி (உ-89

o o o

யாழ். மாவட்ட கிறிக்கெட் கழகங்களின் ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையில் யாழ் செயலகத்தினால் நடத்தப்படும் — ஐந்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட — கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகுகிறது. நாளையும் இப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் நடைபெறும்.

விலகல் முறையில் நடத்தப்படும் இந்தப் போட்டித் தொடரில் மொத்தம் 18 கழக அணிகள் பங்குபற்றுகின்றன.

இன்று முதற்சுற்று மற்றும் இரண்டாம் சுற்றுகளின் பத்து ஆட்டங்கள் நடைபெறும்.

நாளை கால் இறுதி, அரையிறுதி, இறுதி ஆட்டங்கள் நடைபெறும். (உ)

# யாழ். இந்துமைதானத்தில் தொடர் உண்ணாவிரதம்

## 19 ஆம் திகதி வரை நடைபெறும்

யாழ்ப்பாணம், ஏப். 16

அன்னை பூபதியின் 5 ஆம் ஆண்டு நினைவாக நடைபெற்று வரும் தொடர் அடையாள உண்ணாவிரதம் இன்று 16 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை யாழ் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

18 ஆம் திகதி நினைவுக் கூட்டமும் கலை நிகழ்வும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும். நினைவு உரை, சிறப்பு உரை, வில்லிசை (தியாகச் சுடர்), நாட்டிய நாடகம் (அன்னை பூபதியின் போர்), மெல்லிசை நிகழ்வு (அருணா இசைக்குழு ஆகியவையும் அன்று இடம்பெறும்

19 ஆம் திகதி (இறுதி நாள்) நினைவுக் கூட்டமும் கலை நிகழ்வும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

நினைவு உரை, சிறப்பு உரை, வில்லிசை (தியாகச் சுடர்) நாட்டிய நாடகம், மெல்லிசை கலை நிகழ்வு(மட்டு அம்பாறை கலைஞர்கள்) ஆகியவையும் அன்று இடம்பெறும்.

இதற்கிடையில் அன்னை பூபதி நினைவாக நேற்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டனர்.

[illegible] சேர்ந்தவர்களும் இதை ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெறும் உண்ணாவிரத நிகழ்வில் தீவகக் கோட்டத்தைச் சார்ந்த மக்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

இதே போன்று நாளை 17 ஆம் திகதி வலிகாமக் கோட்டத்தைச் சேர்ந்தவர்களும் 18 ஆம் திகதி மட்டு, அம்பாறை தொடர்பகத்தைச் சார்ந்தவர்களும் உண்ணவிரதத்தில் கலந்து கொள்வர்.

இறுதி நாளான 19 ஆம் திகதி மாவட்ட ரீதியான உண்ணாவிரதம் நடைபெறும்.

இதேவேளை மருதனார்மடம் கல்விக் கோட்டம் நடத்தும் அன்னை பூபதி நினைவு தின விழா கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் இன்று பி. ப. 2 30 மணிக்கு இடம்பெறும்.

வல்வையில் வர்த்தகர் சங்கத்தினால் இன்று காலை 9 மணி முதல் மாலை 4 30 மணி வரை வல்வை சனசமூக சேவா சங்கத்திற்கு முன்பாக உண்ணாவிரதம் நடைபெறும்

தென்மராட்சி பச்சிலைப் பள்ளி கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், அங்கத்தவர்களால் எழுதுமட்டுவாழ் சந்தையிலும், சாவகச்சேரி பகுதி மக்களால் பெரிய மாவடி சித்தி விநாயகர் சனசமூக நிலைய முன்றலிலும் இன்று உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும்.

[இ-162, 155, 117, 72)

### ஈ.பி.ஆர்.எல்.எவ்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாலசுப்பிரமணியம் காவல் நிலையத்தில் இருந்து பொலிஸாரின் துப்பாக்கியையும் பறித்துக் கொண்டு ஓட முயன்றதாகவும்—

அச்சமயமே பொலிஸார் சுட்டதில் அவர் கொல்லப்பட்டதாகவும் — தெரிவிக்கப் பட்டது. [த-3]

### பண்டத்தரிப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூடித்தனமாக குண்டுவீச்சுக்களையும், கலிபர் தாக்குதல்களையும் நடத்தியபடி இருந்தன.

அதேசமயம் பலாலி இராணுவத் தளத்தில் இருந்து பயங்கரமான ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன. பண்டத்தரிப்பு, சில்லாலை காவல் அரண்களில் இருந்தும் கவச வாகனங்களில் இருந்தும் படையினர் ஷெல் மழை பொழிந்தபடி இருந்தனர்.

இந்த தாக்குதல்களின் மத்தியில் விடுதலைப் புலிகள்— தொடர்ச்சியாக சுமார் நான்கு மணித்தியாலங்களுக்கு மேலாக ஸ்ரீலங்கா படையினருடன் நேரடியாக ஆக்ரோஷமாக மோதினர்.

இறுதியில் பகல் 12.30 மணியளவில் படையினர் பலத்த இழப்புடன் பழைய நிலைகளுக்குத்திரும்பினர் எனினும் படையினரின் விமானத் தாக்குதல் மற்றும் ஷெல் தாக்குதல்கள் நேற்று பிற்பகல் 3.30 மணி வரையும் தொடர்ந்தன.

(ஓ-15-12-162-3-143-17 51-155-28)

### காயமடைந்தோர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிச்சூட்டில் அப்பையா லக்சுமி காந்தன் என்பவரும் சங்கானை கிழக்கில் ஷெல் தாக்குதலில் தம்பிப்பிள்ளை செல்லத்துரை (75 வயது) என்பவரும் காயம்.

★ பண்டத்தரிப்பு செட்டிய குறிச்சியில் பொம்மர் குண்டு வீச்சு — அம்பலவாணர் மவியுவதேவி (36 வயது) இடது கால் துண்டிப்பு (முழங்காலுக்கு கீழ்). அவரது சகோதரி அம்பலவாணர் கலாதேவி (28 வயது) காயம்.

### செஞ்சிலுவை..

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச் சம்பவத்தில் பனிப்புலத்தைச் சேர்ந்த சர்மா சிவகரன் (வயது 23) என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார்.

நேற்று நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து கோவிலில் தங்கியிருந்த மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் உதவிகளைச் செய்து கொண்டிருந்த சமயம் ஹெலி வந்தது என்றும்—

செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் செஞ்சிலுவை அடையாளமிட்ட மேலங்கியைத் தரித்தபடி நின்றபோதிலும் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சண்டிலிப்பாய்ப் பகுதியில் நேற்று இடம்பெற்ற சம்பவம் ஒன்றிலும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் புக்காரா விமானத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கலிபர் தாக்குதலில் இருந்து தப்பினர்.

இத்தாக்குதலின் போது செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள், படுத்திருந்தும் பதுங்கி இருந்தும் உயிர் தப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ- 2-15)

### இராணுவ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேதமடைந்தது.

விடுதலைப் புலிகள் நடத்திய இந்த துணிச்சல்மிக்க தாக்குதலின்போது படையினரிடம் இருந்து நான்கு நவீன துப்பாக்கிகள் மற்றும் இராணுவத் தளபாடங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் முற்பகல் 11-45 மணியளவில் மன்னார் நகரில் இருந்து தலைமன்னார் நோக்கி சென்று கொண்டிருந்த 'டிரக்' மீது கோணார்பண்ணை, ஓலைத்தொடுவாய்ப் பகுதியில் வைத்தே — விடுதலைப் புலிகள் இரண்டு நிமிட நேர மின்னல் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் படையினரின் டிரக்' முற்றாகச் சேதமடைந்தது. அதிகாரி உட்பட ஐவர் உயிரிழந்தனர் மற்றும் இரு படையினர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மன்னார்ப் பகுதியில் இவ்வருடம் புலிகள் நடத்திய நான்காவது வெற்றிகரத் தாக்குதல் இதுவாகும்.

ஓலைத்தொடுவாயில் அதிகாரி உட்பட ஐந்து படையினர் உயிரிழந்த சம்பவத்தை ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்களும் ஒப்புக்கொண்டுள்ளன. [ஒ-எ-6]

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் இராசதுரை

வேலணையை பிறப்பிடமாகக் கொண்டவரும், புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தில் வசித்தவரும், தற்பொழுது அராலி வீதி, பொம்மைவெளியில் வசித்து வருமான வல்லிபுரம் இராசதுரை 15-04-93 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் வள்ளிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்க்கண்டு நாகம்மாவின் மருமகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், அமரசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கெங்கா, திருலிங்கம் (திரு), வரதலிங்கம், இரத்தினலிங்கம், கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வேந்திரராஜாவின் மாமனாரும், காலஞ்சென்ற கந்தையா, பொன்மலர், சிவசோதி ஆகியோரின் மைத்துனரும், பவநாதனின் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16-04-93) காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திருலிங்கம்
(திருமாமா)
(மகன்)

அராலி வீதி,
பொம்மை வெளி. (25272)

## திருமதி கண்மணி முருகேசு

நவாலி கிழக்கு திருமதி கண்மணி முருகேசு கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், திருமதி புஸ்பம் தம்பிராசா, ஞானரத்தினம், சற்குணம், புஸ்பராசா, சுகந்தசீலன், திருமதி சறோ சிவபாலன், திருமதி தேவி அன்புராசா, திருமதி பத்மா நாகையா, திருமதி நிர்மலா ஞானராசா ஆகியோரின் அன்புத்தாயாருமாவர். அன்னாரின் நல்லடக்க ஆராதனை 17-04-93 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு கொழும்பில் நடைபெறும். அன்றைய தினம் காலை 9-00 மணிக்கு அன்னாரின் நவாலி கிழக்கு இல்லத்தில் ஓர் ஆராதனை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. அன்புராசா, சி. நாகையா.

நவாலி. (6ட18]

## சு. திருமலைசாமிசர்மா
### (கணேசக்குருக்கள்)

கோப்பாய் வடக்கு சுப்பிரமணியக்குருக்களின் சிரேஷ்ட புத்திரன் திருமலைசாமிசர்மா (கணேசக்குருக்கள்) 14-4-93 புதன்கிழமை இரவு சிவபதமடைந்துவிட்டார். தகனக்கிரியைகள் 15-4-93 வியாழன் பிற்பகல் 3 மணிக்கு கோப்பாயில் நடைபெற்றன. சகலரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கோப்பாய் வடக்கு, மனைவி, மக்கள், மருமகன்.
கோப்பாய். (2527ɔ)

செல்வி
## இலக்குமி சின்னத்தம்பி
### (சுவாமி அறிவானந்த மாதாஜி)

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி இலக்குமி சின்னத்தம்பி (மானிப்பாய் மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி முன்னாள் ஆசிரியை) 14 - 4 - 93 இல் சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (15-4-93) நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர்' நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சண்முகநாதன்
(மைத்துனர்)

"அன்பகம்"
உடுவில் கிழக்கு (ç890)

## ஜோண் அன்ரனி
### (தபால் திணைக்கள நுண்ணாய்வுப் பரிசோதகர் மட்டக்களப்பு - Investigation Inspector)

ஜோண் அன்ரனி அகாலமரணமாகிவிட்டார். அன்னார் ஈச்சமோட்டையில் வசிக்கும் திரு திருமதி கஸ்பாரின் சிரேஷ்ட புதல்வனும், கைதடி விக்னேஸ்வர வித்தியாலய ஆசிரியை மேரி கிறேஸ் பத்திமாவின் அன்புக் கணவரும், றொபேட் கிளைவ் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), திருமதி கிளைவ் இவர்களின் அன்பு மருமகனும், யூலியற் கிறிசாந்தி, (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி), ஜெனற் மரிய சாந்தி (திருக்குடும்பக் கன்னியர் மட மாணவி), கறியற் ஜெயசாந்தி புனித ஜோண்பொஸ்கோ பாடசாலை மாணவி), ஜெறாட் கிறிசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வி அன்ரனி மரியறோஸ் (ஆசிரியை மறைக்கல்வி நிலையம்), அன்ரனி மாட்டீன் டீ போறஸ் (கொழும்பு), திருமதி மடோனா இம்மனுவேல் (ஆசிரியை, கொழும்பு), நிர்மலவாசன் (C. T. B கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமலறாணி மாட்டீன் டீ போறஸ், (ஆசிரியை) மாலினி நிர்மலவாசன், விக்ரர் இம்மனுவேல் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16-4-93) வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு 17/3, கச்சேரி, நல்லூர் வீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து புனித யுவானியார் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
17/3, கச்சேரி நல்லூர் வீதி M கஸ்பார்
யாழ்ப்பாணம். (தந்தை)
றொபேட் கிளைவ்
(25271) [மாமன்]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 3[illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## மேதின கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 16

உழைக்கும் மக்களது தினமாகிய மேதினத்தைச் சிறப்பாக நடத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றுக்கு விடுதலைப் புலிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல் துறைப் பணிமனையில் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி கலந்துரையாடல் இடம்பெறும்.

அனைத்து தொழிற்சங்கங்கள், வர்த்தகர் சங்கங்கள், சனசமூக நிலையங்களின் சமாசங்கள், ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை, தெங்கு பனம் — பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கிராம அபிவிருத்தி சங்கங்கள் முதலியவற்றின் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகத்தினரை இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது (ஓ)

## 3 ஆவது கட்ட மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், ஏப். 16

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இன்று வெள்ளிக்கிழமை முதல் மூன்றாவது கட்டமாக பாவனையாளர்களுக்கு ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கும்.

(இ-17)

### யாழ்.நகரில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டர் நிறுவனங்கள் மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் பணியாளர்கள், தொண்டர்கள் சேர்ந்து இந்தக் கண்டனப் பேரணியை நடத்துகின்றனர்.

பிரஸ்தாப பேரணி இன்று காலை 9 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து புறப்படும். பேரணி செல்வோர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அலுவலகத்திலும், யாழ். செயலகத்திலும் மகஜர்களைக் கையளிப்பர்.

இன்றைய கண்டனப் பேரணியில் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள், ஊழியர்கள், சாரணர்கள், திரிசாரணர்கள், கடற்சாரணர்கள், சாரணத் தலைவர்கள், சாரணத் தலைவிகள், பெண்கள் (சாரணீய) வழிகாட்டிகள், பரியோவான் முதலுதவிப் படையினர், றோட்டரிக்கழக உறுப்பினர்கள், றோட்ரக்ட், இன்ரறக்ட், றோட்டரிக் கிராமியக் குழுக்களின் உறுப்பினர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், லியோ கழக உறுப்பினர்கள், மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் தொண்டர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்கள் ஆகியோர் பங்கு பற்றுவர்

(அ-30-111-17)


## பாரதி
சித்தன்கேணி

**A/L 95**

Chemistry —
திரு. சிவசோதி
B. Sc. (Hons)

Physics —
திரு ரூபநாதன்
B. Sc. (Hons)

Pure/App. —
திரு. துரையப்பா
B.Sc. (Maths Special), M.Sc. Eng

**A/L 94**
THEORY

**A/L 93**
PAPER CLASS

[5887]


### பல்லாயிரக்கணக்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

வழக்கம்பரை அம்மன் கோவில், சீரணி நாகம்மாள் கோயில் ஆகியவற்றிலும் மானிப்பாய் பகுதியிலுள்ள பல பாடசாலைகளிலும் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தங்கியிருந்தன.

நேற்று மாலை நிலைமை ஓரளவு சீரடைந்ததை அடுத்து பலர் தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். (ஓ-15)


தாவடி
## ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய
## அலங்கார உற்சவ கலை நிகழ்வுகள்

காலம்: 16 - 04 - 1993 வெள்ளிக்கிழமை
இரவு 9-00 மணி

இடம்: மேற்படி ஆலய திறந்த வெளி அரங்கம்

நிகழ்ச்சிகள்

★ விசேட சொற்பொழிவு
(ஆலயமும் அறநெறியும்)
திருமதி கலைவாணி இராமநாதன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்-யாழ். பல்கலைக்கழகம்)

✶ விசேட நாதஸ்வர-தவில் கச்சேரி

✶ கலாவினோதன் - சின்னமணி குழுவினரின் வில்லிசை நிகழ்வும்

அதைத் தொடர்ந்து

★ ஸப்தஸ்வரா
இன்னிசைக் கானங்களும் இடம்பெறும்

இந் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(25266) — தாவடி இந்து இளைஞர்கள்.



யாழ் நகர்
## ஐங்கரன்
விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும்
## சுற்றுப் போட்டிகள்

அனைத்துச் சுற்றுப் போட்டிகளும்
ஐங்கரன்
விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும்,

✶ துடுப்பாட்டம்: (மென்பந்து)
11 வீரர்கள் கொண்ட 20 ஓவர்கள்

**ஆரம்பம்: 16 04-93** வெள்ளிக்கிழமை பி. ப. 2. 30 மணிக்கு

பிரதம விருந்தினராக திரு. பூ. ரவிதரன்
(ராசி சில்க் உரிமையாளர்) கலந்துகொள்வார்.

✶ கரப்பந்தாட்டம்: (SET UP-வீக் முறையில்)

**ஆரம்பம்: 17 04-93** சனிக்கிழமை பி. ப. 3 00 மணிக்கு

கௌரவ விருந்தினர் திரு. சு. கனகராசா
(மாவட்ட விளையாட்டு அதிகாரி, யாழ்ப்பாணம்)
ஆரம்பித்துவைப்பார்.

சிறப்பு விருந்தினராக திரு. இ. தேவராசா
(மதுரா பட்டு மஹால் உரிமையாளர், யாழ்ப்பாணம்)
கலந்துகொள்வார்.

விளம்பர அன்பளிப்பு: **சாயி மருத்துவக் கல்லூரி**
இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4849)


# மரண அறிவித்தல்

## சதாசிவம் பொன்னம்மா

காரைநகர் பாலாவோடையை பிறப்பிடமாக கொண்ட திருமதி சதாசிவம் பொன்னம்மா நேற்று (15-4-93) பி. ப. 3-00 மணியளவில் காலமானார்.

அன்னார் திரு. கணபதிப்பிள்ளை சதாசிவத்தின் (புறோக்கர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு, திருமதி சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், கமலாதேவி (ஆசிரியை, யா/ வ. இ. ஆரம்பபிரிவு), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், துரைராஜா, (கணக்காளர்), திருமதி சரஸ்வதி, செல்லத்துரை முன்னாள் முகாமையாளர் (பாய்கடை), சிவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட், வவுனியா), சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு சகோதரியும், திருமதி இராசமணி, திருமதி சிவபாக்கியம் (ஆசிரியை), தியாகராஜா, சோமசுந்தரம் (இ. பி. பதிவாளர் காரைநகர்) ஆகியோரின் மைத்துனியுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [16 - 4 - 93] வெள்ளிக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குளிப்பன் வீதி, க. சதாசிவம் [கணவன்]
வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை. (25275)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org